# பெரியார் பல்கலைக்கழகம்

சேலம் – **636 011**

பட்டவகுப்பு – கலையியல், அறிவியல்

முதலாமாண்டு

முதல் பருவம்

# செய்யுள் திரட்டு

**2021–2022** ஆம் கல்வியாண்டில் சேர்க்கை பெறும்

மாணவர்களுக்குரியது

## தாள்-1 இக்கால இலக்கியங்களும் உரைநடையும்

### அலகு – 1

### அ. போகின்ற பாரதமும் வருகின்ற பாரதமும் - பாரதியார்

### வருகின்ற பாரதத்தை வாழ்த்தல்

வலிமை யற்ற தோளினாய் போ போ போ
மார்பிலே ஒடுங்கினாய் போ போ போ
பொலிவிலா முகத்தினாய் போ போ போ
பொறியிழந்த விழியினாய் போ போ போ
ஒலியிழந்த குரலினாய் போ போ போ
ஒளியிழந்த மேனியாய் போ போ போ
கிலிபிடித்த நெஞ்சினாய் போ போ போ
கீழ்மை யென்றும்வேண்டுவாய் போ போ போ

இன்று பாரதத்திடை நாய்போல்
ஏற்ற மின்றி வாழுவாய் போ போ போ
நன்றுகூறில் அஞ்சுவாய் போ போ போ
நாணிலாது கெஞ்சுவாய் போ போ போ
சென்றுபோன பொய்யெலாம் மெய்யாகச்
சிந்தைகொண்டு போற்றுவாய் போ போ போ
வென்றுநிற்கும் மெய்யெலாம் பொய்யாக
விழிமயங்கி நோக்குவாய் போ போ போ

வேறுவேறு பாஷைகள் - கற்பாய் நீ
வீட்டு வார்த்தை கற்கிலாய் போ போ போ
நூறு நூல்கள் போற்றுவாய் - மெய்கூறும்
நூலிலொத் தியல்கிலாய் போ போ போ
மாறுபட்ட வாதமே ஐந்நூறு
வாயில்நீள ஓதுவாய் போ போ போ
சேறுபட்ட நாற்றமும் - தூறுஞ் சேர்
சிறிய வீடு கட்டுவாய் போ போ போ

ஜாதிநூறு சொல்லுவாய் போ போ போ
தருமமொன் றியற்றிலாய் போ போ போ
நீதிநூறு சொல்லுவாய் - காசென்று
நீட்டினால் வணங்குவாய் போ போ போ
தீதுசெய்வ தஞ்சிலாய் - நின் முன்னே
தீமைநிற்கி லோடுவாய் போ போ போ
சோதிமிக்க மணியிலே – காலத்தால்
சூழ்ந்த மாசு போன்றனை போ போ போ

### வருகின்ற பாரதத்தை வாழ்தல்

ஒளிபடைத்த கண்ணியாய் வா வா வா
உறுதிகொண்ட நெஞ்சினாய் வா வா வா
களிபடைத்த மொழியினாய் வா வா வா
கடுமைகொண்ட தோளினாய் வா வா வா
தெளிவுபெற்ற மதியினாய் வா வா வா
சிறுமைகண்டு பொங்குவாய் வா வா வா
எளிமைகண்டு இரங்குவாய் வா வா வா
ஏறுபோல் நடையினாய் வா வா வா

மெய்மைகொண்ட நூலையே – அன்போடு
வேதமென்று போற்றுவாய் வா வா வா
பொய்ம்மைகூற லஞ்சுவாய் வா வா வா
பொய்ம்மை நூல்க ளெற்றுவாய் வா வா வா
நொய்ம்மையற்ற சிந்தையாய் வா வா வா
நோய்களற்ற உடலினாய் வா வா வா
தெய்வசாபம் நீங்கவே – நங்கள் சீர்த்
தேசமீது தோன்றுவாய் வா வா வா

இளைய பாரதத்தினாய் வா வா வா
எதிரிலா வலத்தினாய் வா வா வா
ஒளியிழந்த நாட்டிலே – நின்றேறும்
உதயஞாயி றொப்பவே வா வா வா
களையிழந்த நாட்டிலே – முன்போலே
கலைசிறக்க வந்தனை வா வா வா
விளையு மாண்பு யாவையும் - பார்த்தன்போல்
விழியினால் விளக்குவாய் வா வா வா

வெற்றிகொண்ட கையினாய் வா வா வா
விநயம் நின்ற நாவினாய் வா வா வா
முற்றி நின்ற வடிவினாய் வா வா வா
முழுமைசேர் முகத்தினாய் வா வா வா
கற்ற லொன்று பொய்க்கிலாய் வா வா வா
கருதிய தியற்றுவாய் வா வா வா
ஒற்றுமைக்கு ளுய்யவே – நாடெல்லாம்
ஒரு பெருஞ் செயல்செய்வாய் வா வா வா

## ஆ.எழுச்சியுற்ற பெண்கள் - பாரதிதாசன்

மேற்றிசையில் வானத்தில் பொன்னுருக்கு
வெள்ளத்தில் செம்பருதி மிதக்கும்நேரம்!
வேற்கண்ணி யாளொருத்தி சோலைதன்னில்
விளையாட நின்றிருந்தாள் மயிலைப்போல!
காற்றடித்த சோலையிலே நேரம்பார்த்துக்
கனிய டித்துக் கொண்டு செலும் செல்வப்பிள்ளை
ஆற்றுவெள்ளம் போலாசை வெள்ளம் தூண்ட
அவளிடத்தே சில சொன்னான் பின்னுஞ் சொல்வான்

விரிந்தஒரு வானத்தில் ஒளிவெள்ளத்தை
விரைந்துவந்து கருமேகம் விழுங்கக்கூடும்!
இருந்தவெயில் இருளாகும் ஒரு கணத்தில்
இது அதுவாய் மாறிவிடும் ஒரு கணத்தில்
தெரிந்ததுதான்: ஆனாலும் ஒன்றையொன்று!
தெளிந்தஓர் உள்ளத்தில் எழுந்தகாதல்
பருந்துவந்து கொத்துமென்றும் தணிவதில்லை!
படைதிரண்டு வந்தாலும் சலிப்பதில்லை!

கன்னத்தில் ஒரு முத்தம் வைப்பாய் பெண்ணே!
கருதுவதிற் பயனில்லை தனியாய் நின்று
மின்னிவிட்டாய் என்மனதில்! பொன்னாய்ப் பூவாய்
விளைந்துவிட்டாய் கண்ணெதிரில்! என்று சொன்னான்.
கன்னியொரு வார்த்தையென்றாள்! என்னவென்றான்.
கல்வியற்ற மனிதனை நான் மதியேன் என்றாள்
பன்னூற் பண்டிதனென்று தன்னைச் சொன்னான்
பழச்சுளையின் வாய்திறந்து சிரித்துச் சொல்வாள்

பெருங்கல்விப் பண்டிதனே! உனக்கோர் கேள்வி
பெண்களுக்குச் சுதந்தரத்தான் உண்டோ? என்றாள்
தரும்போது கொள்வதுதான் தருமம் என்றான்
தராவிடில்நான் மெற்கொண்டால் என்னவென்றாள்
திருமணமா காதவள்தன் பெற்றோரின்றிச்
செயல்ஒன்று தான்செய்தல் அதர்மம் என்றான்
மருவ அழைக் கின்றாயே, நானும் என்றன்
மாதா பிதாவின்றி விடைசொல்வேனோ?

என்றுரைத்தாள்! இதுகேட்டுச் செல்வப்பிள்ளை
என்னேடி, இதுஉனக்குத் தெரியவில்லை
மன்றல்செயும் வி'யத்தில் ஒன்றில்மட்டும்
மனம்போல நடக்கலாம் பெண்கள் என்றான்
என்மனது வேறொருவன் இடத்திலென்றே
இவனிட்ட பீடிகையைப் பறக்கச் செய்தாள்
உன்நலத்தை இழக்கின்றாய் வலியநானே
உனக்களிப்பேன் இன்பமென நெருங்கலானான்!

அருகவளும் நெருங்கி வந்தாள்! தன் மேல்வைத்த
ஆர்வந்தான் எனநினைத்தான்! இமைக்குமுன்னே
ஒருகையில் உடைவாளும் இடதுகையில்
ஓடிப்போ! என்னுமோரு குறிப்புமாகப்
புருவத்தை மேலேற்றி விழித்துச் சொல்வாள்
புனிதத்தால் என்காதல் பிறன்மேலென்று
பரிந்தரைத்தேன்! மேற்சென்றாய்! தெளிந்த காதல்
படைதிரண்டு வந்தாலும் சளியாதென்றாள்

ஓடினான் ஓடினான் செல்வப்பிள்ளை
ஓடிவந்து மூச்சுவிட்டான் என்னிடத்தில்
கூடிஇரு நூறுபுலி எதிர்த்ததுண்டோ?
கொலையாளி யிடமிருந்து மீண்டதுண்டோ?
ஓடிவந்த காரணத்தைக்கேட்டேன்: அன்னோன்
உரைத்துவிட்டான் நானவற்றைக் கேட்டுவிட்டேன்
கோடியுள்ளம் வேண்டுமிந்த மகிழ்ச்சிதாங்கக்
குலுங்கநகைத் தேயுரைத்தேன் அவனிடத்தில்

செல்வப்பிள்ளாய் இன்றுபுவியின் பெண்கள்
சிறுநிலையில் இருக்கவில்லை: விழித்துக்கொண்டார்
கொல்லவந்த வாளைநீ குறைசொல்லாதே!
கொடுவாள் போல் மற்றொருவாள் உன்மனைவி
மெல்லிடையில் நீகாணாக் காரணத்தால்
விளையாட நினைத்துவிட்டாய் ஊர்ப் பெண்கள்மேல்!
பொல்லாத மானிடனே! மனச்சான்றுக்குள்
புகுந்துகொள்வாய்! நிற்காதே! என்றேன்: சென்றான்.

## இ. ஒற்றுமையே உயர்நிலை – கவிமணி

ஒற்றுமையாக உழைத்திடுவோம் - நாட்டில்
உற்ற துணைவராய் வாழ்ந்திடுவோம்
வெற்றுரை பேசித் திரிய வேண்டாம் - இன்னும்
வீணாய்ப் புராணம் விரிக்க வேண்டாம்

கூடிவிருந்துண்ண வேண்டவில்லை – பெண்ணைக்
கொண்டு கொடுக்கவும் வேண்டவில்லை
நாடிஎவரொடும் நட்பினராய்த் - தேச
நன்மைக் குழைப்பதில் நஷ்டம் உண்டோ?

கீரியும் பாம்புமாய்ச் சண்டையிட்டு – சாதி
கீழென்றும் மேலென்றும் நாட்டிவிட்டு,
பாரதத் தாய்பெற்ற மக்கள்என்று – நிதம்
பல்லவி பாடிப் பயன் எதுவோ?

வேலன் முகத்தில் உதித்தவேரே - இங்கு
மேலா யெழுந்த குலத்தினராம்
பாத மதில்வந்த பாவியரே – என்றும்
பாரில் இழிந்த அடிமைகளாம்

வாயில் வி'ம்உண்டு பாம்பினுக்கு – கொட்டும்
வாலில் வி'ம் உண்டு தேளினுக்கு
தாயிற் சிறந்த பிரம்மனுக்கும் - இரு
தாளில் வி'ம் உண்டோ? சாற்றுவீரே

உச்சி மரத்திற் சுவைமிக்க சுவைக்கனியும் - தூரில்
ஓடிப் பரந்தெழும் வேரதனில்
நச்சுக் கனியும் பழுத்த பலாமரம்
நானிலத் தெங்குமே கண்டதுண்டோ?

சாதி இரண்டலால் வேறுளதோ? – ஔவைத்
தாயின் உரையும் மறந்தீரோ
ஆதிஇறைவன் வகுத்ததுவோ? – மக்கள்
ஆக்கியகற்பனை தான் இதுவோ?

நாயனார் வந்த திருக்குலத்தை – உயர்
நந்தனார் வந்த பெருங் குலத்தைத்
தீய குலம்எனத் தள்ளுவரேல் - அது
தெய்வம் பொறுக்கும் செயலமோ?

வேதியராலே மழைவருமேல் – வயல்
வேலை செய்யாது விளைந்திடுமோ
வாதமெலாம்கட்டி வைத்திடுவோம் – ஒத்து
வாழ்வதை மேற்கொண் டுழைத்திடுவோம்.

வீட்டுக்குள் சண்டைகள் போடுவதேன்? – கூரை
வெந்து விழுவதும் கண்டிலிரோ?
நாட்டுக்கு நன்மையை நாடுபவர் – இந்த
நாடகம் ஆடல் நகைப்பலவோ?

மானமே வாழ்வின் உயிர்நிலையாம் – அதை
மாசுறச் செய்தல் கொடுங்கொலையாம்
ஈனச் சாதியெனும் பேச்சினைப்போல் – நெஞ்சை
ஈர்ந்திடும் வாளொன்று வேறுளதோ?

மன்னுயிர்க் காக முயல்பவரே – இந்த
மானிலத் தோங்கும் குலத்தினராம்
தன்னுயிர் போற்றித் திரிபவரே – என்றும்
தாழ்ந்த குலத்தில் பிறந்தோர், அம்மா!

### ஈ. அமிழ்த் தமிழ்மொழி – நாமக்கல் கவிஞர்

அமிழ்தம் எங்கள் தமிழ்மொழி
அன்னை வாழ்க வாழ்கவே.
வைய கத்தில் இணையி லாத
வாழ்வு கண்ட தமிழ் மொழி
வான கத்தை நானி லத்தில்
வரவ ழைக்கும் தமிழ்மொழி
பொய்அ கந்தை புன்மை யாவும்
போக்க வல்ல தமிழ்மொழி
புண்ணி யத்தை இடைவி டாமல்
எண்ண வைக்கும் தமிழ்மொழி
மெய்வ குத்த வழியி லன்றி
மேலும் எந்தச் செல்வமும்
வேண்டி டாத தூய வாழ்வைத்
தூண்டு கின்ற தமிழ்மொழி
தெய்வ சக்தி என்ற ஒன்றைத்
தேடித் தேடி ஆய்ந்தவர்
தெளிவு கண்ட ஞான வான்கள்
சேக ரித்த நன்மொழி. 1

உலகி லுள்ள மனிதர் யாவரும்
ஒருகு டும்பம் என்னவே
ஒன்று பட்டு வாழும் மார்க்கம்
தொன்று தொட்டுச் சொன்னது
கலக மற்ற உதவி மிக்க
சமூகவாழ்வு கண்டது
கடமை கற்று உடைமை பெற்ற
கர்ம ஞானம் கொண்டது
சலுகை யோடு பிறமொ ழிக்கும்
சரிச மானம் தருவது
சகல தேச மக்க ளோடும்
சரச மாடி வருவது
இலகும் எந்த வேற்று மைக்கும்
ஈசன் ஒன்றே என்பதை
இடைவி டாமல் காட்டும் எங்கள்
இனிமை யான தமிழ்மொழி. 2

கொலைம றுக்கும் வீர தீரக்
கொள்கை சொல்லும் பொன்மொழி!
கொடியவர்க்கும் நன்மை செய்யக்
கூறுகின்ற இன்மொழி
அலைமிகுந்த வறுமை வந்தே
அவதி யுற்ற நாளிலும்
ஐய மிட்டே உண்ணு கின்ற
அறிவு சொல்லும் தமிழ்மொழி
கலைமி குந்த இன்ப வாழ்வின்
களிமி குந்தபொழுதிலும்
கருணை செய்தல் விட்டி டாத

கல்வி நல்கும் மொழியிது
நிலைத ளர்ந்து மதிம யங்க
நேரு கின்ற போதெலாம்
நீதி சொல்லி நல்லொ ழுக்கம்
பாது காக்கும் தமிழ்மொழி. 3

அன்பு செய்தும் அருள் அறிந்தும்,
ஆற்றல் பெற்ற அறமொழி
அறிவ றிந்து திறமை யுற்றே
அமைதி மிக்க திருமொழி
இன்ப மென்ற உலக றிந்த
யாவு முள்ள கலைமொழி
இறைவ னோடு தொடர்ப றாமல்
என்று முள்ள தென்றமிழ்.
துன்ப முற்ற யாவ ருக்கும்
துணையி ருக்கும் தாயவள்
துடிது டித்தே எவ்வு யிர்க்கும்
நலம ளிக்கும் தூயவள்
தென்பு தந்து தெளிவு சொல்லும்
தெய்வ மெங்கள் தமிழ்மொழி
திசைக ளெட்டும் வாழ்த்து கின்ற
இசைப ரப்பச் செய்குவோம். 4

பழிவ ளர்க்கும் கோப தாப
குரோத மற்ற பான்மையும்
பகைவ ளர்க்கும் ஏக போக
ஆசை யற்ற மேன்மையும்,
அழிவு செய்யக் கருவி செய்யும்
ஆர்வ மற்ற எண்ணமும்,
அனைவருக்கும் தன்மை காணும்
வித்தை தேடும் திண்ணமும்
மொழிவ ளர்ச்சி யாக்கு மென்ற
உண்மை கண்டு முந்தையோர்
முறைதெ ரிந்து சேர்த்த திந்த
நிறைமி குந்த முதுமொழி,
வழிய றிந்து நாமும் அந்த
வகைபு ரிந்து போற்றுவோம்
வஞ்ச மிக்க உலக வாழ்வைக்
கொஞ்ச மேனும் மாற்றுவோம். 5

## உ. அனுபவம் - கண்ணதாசன்

பிறப்பின் வருவது யாதெனக் கேட்டேன்
பிறந்து பாரென இறைவன் பணித்தான்!
படிப்பெனச் சொல்வது யாதெனக் கேட்டேன்
படித்துப் பாரென இறைவன் பணித்தான்!
அறிவெனச் சொல்வது யாதெனக் கேட்டேன்
அறிந்து பாரென இறைவன் பணித்தான்!
அன்பெனப் படுவது என்னெனக் கேட்டேன்
அளித்துப் பாரென இறைவன் பணித்தான்!
பாசம் என்பது யாதெனக் கேட்டேன்
பகிர்ந்து பாரென இறைவன் பணித்தான்!
மனையாள் சுகமெனில் யாதெனக் கேட்டேன்
மணந்து பாரென இறைவன் பணித்தான்!
பிள்ளை என்பது யாதெனக் கேட்டேன்
பெற்றுப் பாரென இறைவன் பணித்தான்!
முதுமை என்பது யாதெனக் கேட்டேன்
முதிர்ந்து பாரென இறைவன் பணித்தான்!
வறுமை என்பது என்னெனக் கேட்டேன்
வாடிப் பாரென இறைவன் பணித்தான்!
இறப்பின் பின்னது ஏதெனக் கேட்டேன்
இறந்து பாரென இறைவன் பணித்தான்!
“அனுபவித்தேதான் அறிவது வாழ்க்கையெனில்
ஆண்டவனே நீ ஏன்“ எனக் கேட்டேன்!
ஆண்டவன் சற்றே அருகு நெருங்கி
“அனுபவம் என்பதே நான்தான்“ என்றான்!

**ஊ. கவிதையென்ப – கு.கணேசன்**
**யாப்பிலக்கண நூல் வகை அறியலாமே !**

முத்தமிழில் முறையாக யாத்து வைத்த
மூலங்களாம் தொல்காப்பியம்! எளிய நன்னூல்
வித்தெனவே தொன்னூலாம்! சாமி நாதம்!
வீரமிகும் முத்துவீரியம்! விரியும் நல்ல
தத்துவமாய் வீரசோழியம்! என்றே யிங்கு
தமிழ்மொழியின் ஐந்திலக்கணக் கோட்பாடாகும்!
இத்தரையில் செம்மொழியாய் நிலைப்ப தற்கு
இலக்கணத்தின் ஆணிவேர்கள் ஆழம்! நீளம்!

பொன்போல் பன்னிருபடலம்! பொருளைக் கூறும்
புறப்பொருள்வெண் பாமாலை! பன்னிரண்டும்
முன்னோர்கள் வகுத்த திணைக் காட்சியாமே
மரபுவழி களவுபற்றி விதிபிரித்து
உய்வித்த நம்பியகப்பொருள்! நெறிவிளக்கம்!
உயர்களவியற் காரிகையே! என்றும் நின்று
மெய்ப்பொருளை உரைக்கின்ற இலக்கணங்கள்
மொழிகாக்கும் சங்கநாத ஓசை யாகும்

யாப்பினைச்சொலும் யாப்பருங்கலம்! கற்ப தற்கு
யாப்பருங்கலக் காரிகையே! செய்யு ளீற்ற
யாப்பிலக்கணம்! பாப்பாவினம்! விருத்தம் பற்றி
பல்சந்தப் பரிமளம் விருத்தப் பாட்டு
எப்போதும் புலவர்களின் உயிரில் வாழும்
யாப்பிலக்கண நூல்வகையை அறியலாமோ?
தப்பேதும் இல்லாமல் தகுதி பெற்றால்
தரமான கவிதைகள் பாடலாமே!

அணியென்னும் சொல்லுக்கு அழகு என்பார்
உவமைகளின் உருபுகளை உத்தி யாக்கி
அணிசேர்க்கும் தண்டியலங் காரம்! மாறன்
அலங்காரம்! அணிஇலக்கணம்! நூறுநூறாய்
அணிவகுக்கும் இலக்கணங்கள்! செய்யுள் செய்ய
எந்தமொழியில் இவையுண்டு? நம்மிடையே
பிணிநீக்கி கவியெழுத மருந்தே யாகும்
பாவலர்கள் நெஞ்சத்தில் அருவி ஓடும்!

திணையாமே குறிஞ்சிமுல்லை மருதம் நெய்தல்
திரிபான பாலையென்று முறைமையாக
திணைக்கேற்ற நிலம்பிரித்துப் பொழுது காலம்
துறையென்னும் வகைப்பாட்டைச் செய்து வைத்து
இணையற்ற வாழ்வியலை வகுத்தார் முன்னோர்
உரிப்பொருளும் கருப்பொருளும் காட்டிக் காட்டி
துணைக்கேற்ற வரைவுகண்டார்! சங்கம் போற்றும்
தொகையெட்டும் வகைப்படுத்தும் உணர்வோம் நாமே!

புறப்பாட்டும் அகப்பாட்டும் சரித்திரத்தைப்
புவிமீது காட்டுகின்ற எடுத்துக் காட்டு
அறப்பாட்டு அவ்வைப்பாட்டு! வள்ளு வத்தால்
அறம்பொருளின்பம் நான்கும் வாழ்க்கைப் பாட்டு

மறப்பாட்டு நானூறும் தேவரேற்றும்
மனதோடு நின்று காட்டும் வீரப்பாட்டு!
குறப்பாட்டு குற்றால மக்கள் பாட்டு
குவலயத்தில் சந்தத்தைக் கொட்டும் பாட்டு!

விருத்தமென உயர்கவிதை சொன்ன கம்பன்
விரியுலக அழகுடனே கண்ட ஞானி
பொருத்தமென அறுசீரில் பொருள்பொதிந்த
பொன்னோவியம் வரைந்திட்ட புதுமை வாணன்
விருத்தமென நடையாலே சித்தி ரத்தை
வையத்தில் நுகர்வதற்கு வைத்தா ரிங்கே
திருத்தமிலாக் காவியத்தைத் தந்த தற்குத்
திருவடியைக் கண்டுகண்டு வணங்கு வோமோ!

விடுதலைக்கு வழிசொல்லித் தேசி யத்தை
விதைத்தபாட்டு பாரதியார் செய்தபாட்டு!
கெடுதலைக்குத் துணிந்தபேரைக் கீதம் பாடிக்
கிளப்பிவிட்ட கிளர்ச்சிப்பாட்டு! மடமை தம்மை
எடுத்தகற்ற பாவேந்தர் பாட்டு! தந்தை
ஏற்றிவைத்த பகுத்தறிவுப் பாட்டு! நாளை
அடுத்துவரும் தலைமுறைக்கும் உணர்த்தும் பாட்டு!
எந்நாளும் உயிர்த்திருக்கும் ஜீவா பாட்டு!

மரபுவழி பேணுகின்ற கவிதை தன்னை
மனங்கிறங்கப் பாடிவந்த கண்ணதாசன்!
மரபுக்குய் வார்த்தைகளை வார்த்து வார்த்து
மறுமலர்ச்சி உவமைகளைப் புதுக்கித் தந்த
உரமேற்றும் சுரதாவின் புதிய பாட்டு!
உலகறிய இராவணனின் காவியத்தைத்
தரமாகத் தந்தகுழந்தை! வைய மெல்லாம்
தமிழ்பாடும் எத்தனையோ கவிகள் உண்டு!

அள்ளஅள்ளக் குறையாத செல்வம் போல
அகிலத்தின் உயர்கவிதை தமிழிலுண்டு
பள்ளத்தில் விழுந்திட்ட முடவராகப்
பைந்தமிழைப் பண்பாட்டை இலக்கணத்தை
உள்ளத்தால் உணராமல்: பதவிக்காக
என்றெல்லாம் கனவுகளோடு கவிபடைக்க
குள்ளமனம் கொண்டோர்கள் முயல லாமா?
களங்கத்தைச் செய்யலாமா? சொல்வீர் நன்றே!

பிழையின்றி எழுதுகின்ற பயிற்சி யாலே
பன்முகமாய் வடிவத்தைக் காட்டலாமா?
மழையின்றி ஒருபோதும் மண்ணுயிர்கள்
மண்மேலே செழித்திடுமோ? மறக்கலாமோ?
அழைப்பின்றி அவசரத்தால் புலமையின்றி
ஆருடம்போல் பொய்ப்புனைவு புனையலாமோ?
குறையின்றி பொருளறிந்து கவிதை பாட
குறையாத உழைப்பொன்றே மூல மாகும்!

## அலகு -2

## அ. புழுதி (கறுப்பு மலர்கள்) – நா. காமராசன்

ஏ! உதிரி மண்ணே

உன்னைத் தலைமேல் தூக்கிவைத்துக் கொள்ளும்

சூறைக் காற்று இதோ வந்து விட்டது.

சருகுத் துறவிகளுடன்

சம்பந்தம் வைத்துக் கொண்டு

குப்பைப் புராணம் வளர்க்கும்

குபேர அழுக்கே கொஞ்சம் இதைக்கேள்!

நண்பகற் பொழுதில் நீ

நடைபாதை நெருப்புத் தூள்!

ஆடி மாதத்திலோ விழிகளைத் தாக்கும்

ஆடிக் காற்றின் ஆயுதம்?

மங்கையர் கைமலர்களுக்கே

காலை வேலை வைக்கும்

மண்ணின் சோம்பலே

மழைக் காலச் சேறு

உன் மறு பிறப்புத் தானே?

ஏழை உழவனின் மேலாடையே

ஏ! நாடோடி மண்ணே!

பாரெங்கும் பொதுவுடைமைக் கொடி

பறக்கும் போது

உன் மேனிக்கும் பச்சைப் பயிர்ப்

போர்வை கிடைக்கும், போதுமா?

## ஆ. கண்ணீர் பூக்கள் - மு.மேத்தா

## இந்த பூக்கள் இந்த பூக்கள் இந்த பூக்கள் -

உலகெங்கும் இதழ் இதழாக
இந்தப் பூக்கள்
உதிர்ந்து விழுவது யாருக்காக?

எந்த தேவ தேவனுடைய
கால்களை அர்ச்சிக்க இவை
கண்ணவிழ்க்கின்றன?

அழகிய நிறமுமில்லாமல் மணமுமில்லாமல்
பூத்த உடனே உதிர்ந்து போகிற இவற்றை
யார் வாங்குவார்கள்?

இவை
எவருக்கு வேண்டுமானாலும் வழங்கப்படுகிற
இலவசப் பூக்களா?
இல்லை -

கனமாகிப்போன மன அணைக்கட்டின்
கசிவு -

வேதனையின்
குண்டு விளையாட்டு

காய்ந்த நினைவுகளில் வேர்பிடித்துக்
கலங்கும்
இதயச் செடியின் காணிக்கை!

துக்கத்திற்கு அடையாளச் சின்னம்
கறுப்பல்லவா...
ஏன் இந்த விழி வெள்ளைக் கொடி பிடிக்கிறது.

சண்டை பிடிக்க முடியாத போது
சமரசம் செய்து கொள்ள
சமாதானப் புறா தயாராகிறதா?

துக்கக் கதவுகளைத் திறந்துவிட்டு
தூக்கக் கதவுகளை அடைத்துக்கொள்ளும் சாவி
இதனிடம்தான் இருக்கிறது.

வாசனை இல்லாத இந்தப் பூக்கள்தான்
இதயமுள்ள எந்த மனிதனையும்
இன்னொருவர்க்காக ஈரப்படுத்தும்

இந்த நீர்ப்பூக்களைக் கொடுக்கும்
செடியின் நீளம்
மனக்குளத்தின் துயர மட்டத்தைப் பொருத்தே
நீளும் - தாழும்!

எங்கெல்லாம் மானுடம் காயம் படுகிறதோ
அங்கெல்லாம் பூக்கும்
சகோதர சோகங்களின் சர்வதேசிய பூக்கள்
இவைதான்

என்றாலும்
இந்தப் பூக்களைப் பூத்துத் தருகிற கொடி
ஏழைக் குடிசைகளின் மீது தான்
ஏறிப் படரும்

ஓர் இதழே இத்தனை சூடாக இருந்தால்
அந்தச் செடியின் அடியில்
எத்தனை யுகங்களின் வெப்பம்
சேமிக்கப்பட்டிருக்கும்?

இந்த நெய்த்துளிகள் விழுந்த பிறகே
நெருப்புப் பற்றுகிறது.
பிறகுதான்
எழுச்சி விளக்குகள் எரிகின்றன.

எரியப்போகும் தீயை
எடுத்துக் காட்டும் கண்ணாடியா இது?
போராட்டங்களைத் தூண்டி விடுவதும்
போராடும் போது தூவப் படுவதும்
இந்தப் பூக்களே!
எந்தத் துயரத்திற்கோ இவை
சாட்சியம் சொல்கின்றன...
இவற்றுக்குச் சாட்சியங்களாகவே
எங்கள் கவிதைகள் பிறக்கின்றன!

எங்கள் கவிதைகளுக்குச்
சாட்சியம் கூறப்போவது எது?

## இ. சிற்பி பாலசுப்ரமணியம் - ஒரு கிராமத்து நதி

எங்கிருந்து வருகிறது
இந்த நதி?
மலைகளின்
மௌனம் உடைந்தா?
முகில்களின்
ஆடை கிழிந்தா?
வனங்கள் பேசிய
இரகசியங்கள் கசிந்தா?
இல்லை...
என்னிலிருந்து
என் அந்தரங்கங்களின்
ஊற்றுக்கண் திறந்து
என் மார்புகள்
புல்லரித்து
என் ரத்தக் குழாய்களில்
புல்லும் பூவும் மணந்து
என்னை முழுக்காட்டி
என்னையே கரைத்துக் கொண்டு...

அங்கிருந்து வருகிறது
இந்த நதி.
ஓடும் பாம்பை மிதித்துக் கொண்டும்
புல்லாங்குழல்கள் ஊதிக் கொண்டும்
ஆடித்திரியும் சின்னக் கண்ணன்கள்
இங்கும் உண்டு
இது என் யமுனை...

அலுத்துப் படுக்க
அரிச்சந்திர மயானமும்
நெருப்பில் குளித்த மிச்சங்களை

பனிக்குடத்தில்

பவித்திரமாய் ஏந்தும்

ஈரக் கருப்பையும் இதனிடம் உண்டு

இது என் கங்கை

அண்டை மாநிலத்துக்குச்

சண்டைகள் போடாமல்

போகிறது

இது என் காவிரி

உப்பாறு இதனுள் சங்கமிக்கும்

பாலாறும் கூட

இது என் உதிரத்தின் உப்பு

இது என் தாய்ப்பால்

படிக்காத இதிகாசங்களும்

எழுதி முடிக்காத சரித்திரங்களும்

இதன் கரையில்...

பாறைகளைச்

சிற்பமாக்குகிற பழக்கம்

இதன் அலை நுணுக்கம்

பகல்களில்

நகரும் ஓவியம்

இரவுகளில்

தொலைதூரக் காற்றின்

நாதசுரத்துக்கு அசையும்

பாதரசம்

தானும் உணவாகி

மீனும் உணவாகும்

இந்த நதிக்கு

நானும் உணவாவேன்

இது

நான் தவழ்ந்த கோரைப்பாய்
முகம் பார்த்த கண்ணாடி
என் காதலின் வீணை
ஏகாந்தங்களின் பள்ளியறை
பெருமூச்சுகளின் பந்தய மைதானம்
பாரங்கள் தாங்காது வழியும்
பெரிய கண்ணீர்த்துளி
நினைவுகளைப் பொதிந்து வைத்த
வெள்ளித்தாள்.

துயரங்களின் கால்வாய்
சந்தோஷங்களின் சமுத்திரம்
என் நீல ரத்தம்
என் ஆதிக் கவிதைகளின்
தொப்புள்கொடி
அந்திமச் சாசனத்தின்
ஏட்டுச் சுவடி
காலங்களின் தோளில்
பவனிவரும் இந்த மகாகவிதையில்
எழுத்துக்களுக்கு இடையே
தேங்கும் மௌனம்
நான்

## ஈ. பாரதி கண்ட மானுடம் - ஈரோடு தமிழன்பன்

ஏன் வேண்டும் அறிமுகம்

என்னைத் தெரியாதா?

நித்தம்

சூரியனைப் பிரசவிக்கும்

நீலத்தாய்

அருகில்

ஒரு சிலையாய் நின்றிருந்தேன் -

வந்துவிட்டேன்

என்றன் சிலைதான்

என்றாலும்

எவரெவரோ உள்ளே

ஒரே நெரிசல்

எனக்கு இடமில்லை... வந்துவிட்டேன்,

அல்லிக்கேணி

யானை மிதித்து நான் சாகவில்லை,

இப்போது தான்.......

எவரெவர் என்றில்லாமல்

எல்லோருமாய் மிதித்து

என்

உடம்பெல்லாம்

உச்சரிப்புப் பறிபோன காயங்கள்!

கல்யாணக் கூட்டத்தில்

மணமக்கள்

காணாமல் போனதுபோல்

எனக்கெடுக்கும் விழாக்களில்

நான்தான்

தொலைந்து போகிறேன்.

இப்போது,

உங்கள் - வெற்று

நிமிடங்கள், சிலவற்றில்

என்னை

நிரப்ப வந்துள்ளேன்!

உங்கள்

நிமிடங்களை – கொஞ்சம்

எனக்காகக்

காலி செய்து வையுங்கள்!

கல்யாணமாகாத பெண்...

வேலை கிடைக்காத பையன்...

சாக மறுக்கும்

வீட்டுக் கிழடுகள்

சலிப்பு வேர்வை விடும்

அலுவல் -

சம்பளப்பிடித்தம் ... ஒருமைப்பாட்டுக்கு

மாநிலங்களின் பெயர்களை,

மனப்பாடமாக்கும்

லாட்டரிகள்...

எண்ணெய், சிமெண்ட் ...சிலுக்கு

கலப்பட அரிசி, அரசியல்... இன்னும்

புலப்படா

எத்தனையோ பிரச்சனைகள்

எல்லாவற்றையும்

எனக்காக......

இந்த நிமிடங்களிலிருந்து

முன்னறிவிப்பின்றி

வெளியேற்றி விடுங்கள்!

உங்களுக்கு

உங்களை நினைவுபடுத்த வேண்டும்!

மானுடரே!

மகத்தானவர் நீங்கள்!

ஓட்டுக் கேட்க நான்

உடுக்கையடிக்கவில்லை –

உண்மையைச் சொல்கிறேன்!

தெய்வீகம்

முகம் பார்த்துக் கொள்ளும்

கண்ணாடி – மானுடம்

தேசியம் -

அதன் தோகையிலுள்ள

ஆயிரம் கண்களில் ஒரு கண்!

உபயோகமில்லை

என்று – உங்களை

மரணம்

உதறியதால் - நீங்கள்

வாழ்க்கையின்

வாசலில் வந்து

விழுந்தவர்கள் அல்ல…

பிறப்பு

கேட்டுக் கொண்ட

ஒரு மன்னிப்பல்ல, வாழ்க்கை.

மலர்,

தனது மரணத்திற்குக் கூட

மணம் ஊட்டுகிறது.

மனிதரே,

உங்கள்

மூச்சில் ஏன் பிணவாடை?

நட்சத்திரங்களைப்

பறிக்க வேண்டிய கைகளால்…..

நீங்கள் - உங்கள்

சவப்பெட்டிக்கு

ஆணிகள், திரட்டுகிறீர்கள்.

ஒரு

பிரளயம் போல

எழு என்கிறேன்... நீங்கள்

மாநகராட்சிக்

குழாய்போல –

சொட்ட முடியாமல் சொட்டிக் கொண்டிருக்கிறீர்!

முள்களைக் கண்டு – நீங்கள்

முகம் வேர்த்தால் கூட

என்னால்

புரிந்து கொள்ள முடியும்,

ஆனால்...

ஜிலேபியின் வளைவுகளைக்கூட

சிக்கல் என்று நிற்கிறீர்களே – அதுதான்

ஆச்சரியம்!

என் கருத்தை

மறந்துவிட்டு – என்னைப் பாராட்டுகிறீர்!

பலே...நீங்கள்

மனைவியை மறந்து விட்டுத்

தேன் நிலவுக்குப்

புறப்படும் - மாப்பிள்ளைகள்...

மாதர் தம்மை

இழிவு செய்யும் மடமையைக்

கொளுத்தென்றேன்....

நீங்களோ

மாதரையே கொளுத்துகிறீர்கள்!

கவிதை தந்ததற்குப்

பதிலாக – உங்களுக்குக்

காது கேட்கும்

கருவி நான் தந்திருக்கலாம்?

வீடுதோறும் கலையின் விளக்கம்

வீதிதோறும் இரண்டொரு பள்ளிகள்

என்றேன்…..

வீடுதோறும் மதுவின் வாடை

வீடுதோறும் இரண்டொரு கடைகள்

ஆயிரம் உண்டிங்கு

ஜாதி எனில்

அந்நியர் வந்து

புகல் என்ன நீதி?

அன்று –

‘ஆண்டவனிடம்’ கேட்டேன்!

“அடே! இந்தியனே!

இப்போது சொல்கிறேன்

ஆயிரம் ஜாதிகள்

இருந்தால் அந்நியர் வந்து

புகுவதுதானடா நீதி!

உன்

படகிலே

ஓட்டைகளிருந்தால்

நீர்வந்து

புகுவதுதானே நீதி!”

புதியன விரும்பு – என்றேன்

நீங்கள் -

புதைகுழிகளுக்குள்

எலும்பு சேகரிக்கப் போய்விட்டீர்கள்.

ஒளிபடைத்த கண்ணினாய் வாவா

உறுதி கொண்ட நெஞ்சினாய் வா வா

என்று அழைத்தேன் - என் முன்

இடியாப்ப இழைகளாய் இளைத்து

நெளியும் நீங்களா இளைய பாரதம்?

மனிதர் நோவ

மனிதர் உணவைப் பறிக்காதே – என்றேன்!

கொஞ்சம்,

கூட, உறங்கினால் - உங்கள்

சகோதரன் தலைமாட்டிலேயே

ஊது வத்தி

வைத்துவிடும், ஆசாமிகள் நீங்கள்!

வானம்

தனது முதல் வைகறையைக் கூடப்

பிழையாக எழுதியதில்லை...

மானிடரே –

ஒரு முறையேனும் நீங்கள்

சரியாக

வாழக் கூடாதா?

மானுடம் என்னும்

புல்லாங்குழலை வாசியுங்கள் -

அதன்

பொத்தல்களில் புழுக்களாய்

நெளிய வேண்டாம்!

வயதுகளை

வளர்ப்பதற்காக – நீங்கள்

வாழ்க்கையைக்

கொன்றுவிடுகிறீர்கள்!

ஒரு

பார்வையின்

பரிமாணம்,

கண்களின் அகல நீளங்களால்

கணிக்கப்படுவதில்லை!

வாழ்க்கை

நாள்களால் அல்ல –

வாழ்ந்த விதத்தாலேயே

அளக்கப்படுகிறது!

ஒரு

பறவையின் சிறகில்

வானம் பூமிக்கு வருகிறது!

உன்

தோளில்… இந்தப்பூமி

விண்ணுக்குப் போகவேண்டாமா?

யுகங்களில்

சுளைபடும் நொடிகளில்

அமுதம் பருகு!

எனக்கும்

நேரமாயிற்று,

வருகிறேன்.

என் சிலை அங்கு

இருக்கிறதா என்று

பார்க்க வேண்டும்

இறுதியாக ஒன்று ….

என்பாட்டை நீங்கள்

படிக்காவிட்டாலும்

பரவாயில்லை… உங்கள்

பாட்டைக் கொஞ்சம்

ஒழுங்காய்ப் பாருங்கள்!

## உ. முதுமை – அப்துல் ரகுமான்

முதுமை

நிமி'க் கறையான்

அரித்த ஏடு

இறந்த காலத்தையே பாடும்

கீறல் விழுந்த இசைத்தட்டு

ஞாபகங்களின்

குப்பைக் கூடை

வியாதிகளின்

மேய்ச்சல் நிலம்

காலத்தின் குறும்பால்

'கார்ட்டூன்'' ஆகிவிட்ட

மாமிச ஓவியம்

வாழ்க்கை வாக்கியத்தின்

உணர்ச்சிக்குறியாயிருந்த

உடல்

வளைகிறது.

கேள்விக்குறியாக!

விடைகளெல்லாம்

புதிர்களாகும் விரக்தியில்:

இந்த வில் வளைகிறது

மரணத்தை

உயிர் மணக்க

இந்த வில்

ஒடிய வேண்டுமா?

உயிர்களுள் தான்

ஆய்தம் எனக் காட்ட

நடக்கும் பாதையெல்லாம்

காலோடு கோல்சுவடு

மறுப்பதுபோல் தலையாட்டம்
வாழ்வையா?
மரணத்தையா?

கருப்பை தோய்ந்த சாயம்
வெளுக்கிறது
காலச் சலவையில்
இதுதான்
கேசங்களின் அசல் நிறமோ?

அப்படியென்றால்
முதுமைதான்
மனிதனின் நிஜவடிவமோ?

இளமை
ஒப்பனையோ?

நரை... இந்த நரை
யௌவன வெள்ளம்
வடிந்து போனபின்
நுரையா?

ஓ... இது
மூச்சுக் குதிரை
ஓடிக் களைத்துத்
தள்ளும் நுரை

நரை... இந்த நரை
விதவை ஏக்கங்களின்
வெள்ளாடை

வெற்றிலை போட்ட

அனுபவங்கள்

தடவி விட்டுச் சென்ற

சுண்ணாம்பு

சுருக்கங்கள் ... இந்தச்

சுருக்கங்கள்

உயிர் எழுதிக்கொண்டிருக்கும்

ராஜினாமாக் கடித வரிகள்

இருமல்

இது இருமல் அல்ல

மரணம்

உயிர் வீட்டுக் கதவை

இடிக்கும் ஓசை

கண்கள்-

ஒளிமங்கிய தீபங்கள்

செவிகள் -

போரில் கிழிந்த பறைகள்

நாவு –

கருகிப்போன திரி

நாசி –

படுத்துவிட்ட வேட்டை நாய்

மெய்-

வெறும் சாம்பல்

உலகத்தையே புரட்ட

நெம்புகோல் ஏந்தும்

வாலிபத்தின் முன்

தான் புரண்டுவிடாமலிருக்க

ஊன்றுகோல் பிடிக்கும் முதுமை

தலை குனிகிறது

இளமைக்கு

போர்க்காலத்து

நிராயுதபாணி

முதுமை

சமாதான காலத்து

ஆயுதபாணி

முதுமை

போதிமர நிழல் தான்

ஆனால்

சிலர்தான் இங்கே

புத்தர்களாகிறார்கள்

பலர்

உறங்கிவிடுகிறார்கள்

## ஊ. நட்புக்காலம் -அறிவுமதி

1. உன்

   பிறந்த நாளுக்கான

   வாழ்த்து அட்டைகளில்

   நல்ல வரிகள்

   தேடித்தேடி

   ஏமாந்த சலிப்பில்

   தொடங்கியது

   உனக்கான

   என் கவிதை

2. நீ

   என்னிடம்

   பேசியதை விட

   எனக்காகப்

   பேசியதில் தான்

   உணர்ந்தேன்

   நமக்கான

   நட்பை

3. இதயம் சேகரித்துக்

   கொண்டிருந்த

   வானத்தில்

   நீ

   பறக்கத் துடிக்கையில் அசைந்த

   புற்களின்

   நடுவே தான்

   அமர்ந்திருந்தது

   நம் நட்பின்

   முதல் நாள்

4. அம்மா அப்பாவிடம் அறிமுகப்படுத்த

முதன்முதலாக என்னை நீ

உனது வீட்டிற்கு அழைத்துச்

சென்றிருந்த போது

வழக்கமான அம்மாக்களின்

சந்தேகத்தையொத்த பரிமாறலுக்கு

நடுவே

‘எப்போதும் இவன் உன்

மருமகனாக முடியாது’

ஏனெனில்

இவன் என்

நிச்சயிக்கப்பட்ட நண்பன்

உன் குரல்

இப்போதும் கேட்கிறது

எனக்குள்

5. தேர்வு முடிந்த

கடைசி நாளில் நினைவேட்டில்

கையொப்பம் வாங்குகிற

எவருக்கும் தெரிவதில்லை

அது ஒரு நட்பு முறிவிற்கான

சம்மத உடன்படிக்கை என்று